முருகு



நல்லைக்கந்தன் -

# பாமாலை

நல்

பிர

# நல்லைக் கந்தன் பாமாலை

ச. முருகையா
(முருகு)

பிரணாஸ் பிரசுரம் – 04

உ
சிவமயம்

அறிவூட்டி
நெறிகாட்டி
என்னை
ஆளாக்கிய
என் தந்தை

*யா / கல்வயல் ஸ்ரீ சண்முகானந்தா*
*வித்தியாசாலையின்*
*இளைப்பாறிய அதிபர்*
அமரர்

**திரு: க. சரவணமுத்து**
அவர்களுக்கு

இப்பாமாலை
**சமர்ப்பணம்**

உ
சிவமயம்

# சிறப்புப் பாயிரம்

செந்தமிழின் ஈழநல்லூர்க் கந்தன் பாதம்
சேவித்துப் பக்திவெள்ளம் ததும்பச்; செந்தேன்
கந்தமெழு பாமலரின் மாலை கட்டிக்
காந்தமெழு இசையோடு இணைத்துப் பாடும்
நந்தமிழன் நற்புலவன் ''முருகு'' என்னும்
நாமத்தோன் தரும்பாடல் நல்லூர்க் கந்தன்
வந்தனைக்கே எமையெல்லாம் உருக்க வைக்கும்
வடிவேலன் அருள்பெற்றுத் தந்தான் வாழி!!

'இயலிசைவாரிதி' பிரம்மஸ்ரீ ந. வீரமணிஐயர்

உ
சிவமயம்

# முன்னுரை

''உள்ளோரின் புகழ்பாடி நாவும் சலித்ததையா!
உள்ளோரின் நலம்பாடிப் பாவும் வலித்ததையா!!
வல்லோரின் திறம்பாடித் தமிழும் களைத்ததையா
நல்லூரா உனைப்பாடு மென்வாழ்வே இனிக்குதையா!!''

என்று கழிவிரக்கமும் பத்திக் கனிவும் கொண்டு நல்லூர்க் கந்தனை நாவாரப் பாடுகின்ற நற்கவிஞரான முருகு சிறுபராயந் தொட்டுத் தமது கல்வியோடு நின்றுவிடாது ஆக்க இலக்கியத் துறையிலும் ஈடுபட்டுக் கவிதையும், சிறு கதையும் யாத்துத் தம்மைக் கவிஞராகவும், எழுத்தாளராக வும் இனங்காட்டியவர். காலப்போக்கில் இவற்றோடு இசைப் பாடல்களும் இவரைக் கூடுதலாக ஆட்கொண்டு விட்டமைக்கு முன்பு இவர் வெளியிட்ட ''பக்திப் பாமாலை'' (1987) ''ஐங்கரன் பாமாலை'' (1993)யும் இன்று வெளியாகும் நல்லைக் கந்தன் பாமாலை'' யும் எடுத்துக் காட்டுக்கள். இவை அவ்வப்போது ஈழத்துப் பத்திரிகைகளில் வெளியானவை யாகும்.

தன்னிரக்கம், உருக்கம், தன்னைத் தாழ்த்தி இறைவன ருளுக்கு ஏங்கும் ஏக்கம், பழந்தமிழ்ப் பக்திப் பாடல்களிலும் சமயக் கருத்துக்களிலும், தத்துவங்களிலும் போதிய அறிவு என்பவற்றோடு ஓரளவு இசைஞானமும் வாய்க்கப் பெற்ற

ருக்கும் ஒருவர்தாம் சிறந்த கீர்த்தனைகளை இயற்றுவது சாத்தியமாகும். இத்தனை தகுதிகளும் 'முருகு' ஆகிய திரு. ச. முருகையா அவர்களிடம் குறைவற நிறைந்துள்ளன என்பதற்குப் 'பக்திப்பாமலை' மட்டுமன்றி 'ஐங்கரன் பாமாலை' யும் 'நல்லைக் கந்தன் பாமாலை'யும் நல்ல எடுத்துக்காட்டுக்கள் என்பேன்.

''தம்மையே புகழ்ந்திச்சை பேசினும் சார்பினுந் தொண்டர்த் தருகிலாப் பொய்ம்மையாளரைப் பாடாதே'' எந்தை நல்லை முருகப் பெருமானையே பாடி முருகுடைத் தீந்தமிழுக்கு, அதன் பக்திப்பாநலத்துக்கு அணிசேர்க்கும் 'முருகு' ஈழத்துப் பக்திப் பாவலர் வரிசையிலே தமக்கெனக் குறிப்பிடத்தக்கதோர் இடத்தைப் பெற்றுவிட்டார்! உண்மை; வெறும் புகழ்ச்சி இல்லை!

செந்தமிழால் வைதாரையும் அங்கு வாழவைப்போனாகிய எம் பெருமான் நல்லைக் குமரன் இவருக்கு எல்லா நலங்களும் அருளி வாழ வைக்க வேண்டுமென்று அவனுடைய திருத்தாள் மலர்களை வழுத்துகின்றேன். முருகுத் தமிழில் உருகிக் கவிப்பா – இசைப்பா – பொழியும் முருகு வாழ்க.

**க.சொக்கலிங்கம்**
**(சொக்கன்)**

நாயன்மார்கட்டு
94 – 02 – 06

உ
சிவமயம்

# என் உரை

நல்லூர் பண்டைத் தமிழரின் ஆட்சித் தலைநகராக விளங்கியது மட்டுமன்றி, ஆத்மீகத்தின் தலைநகராகவும் விளங்கியது; விளங்குகின்றது; என்றால் அது மிகையாகாது. இந்த நல்லைநகர் மண்ணில் எண்ணில்லா ஞானிகளும் மேதைகளும், தியாகிகளும், துறவிகளும், வீரர்களும் தம் பாதங்களைப் பதித்துள்ளனர் என்பதனாலும் அம்மண் புனிதமும் புதினமும் நிறைந்ததாகின்றது.

பழமையும், புதுமையும், மகிமையும், பெருமையும் மிக்க நல்லைநகரில், கோவில் கொண்டுள்ளான், புள்ளிமயிலேறும் வள்ளி மணவாளன்; அமரர் குலம் காத்து அமரர்பதியின் ஒரு மகளை – திருமகளை – கரம் பற்றிய கார்மயில் வாகனனாம் கந்தவேள்!!

பேராயிரம் பரவி வானோர் ஏத்தும் எங்கள் வேளாம் கந்தவேளின் புகழ் பாடப்பாட விரியும். அருள் விளையாடல்களைக் கூறக் கூறத் தொடரும், தேடத் தேடத்தொடரும், சூடச் சூடச் சுடரும். சிற்றறிவுடையய என்னால் அது இயலாது எனவே அதனை விட்டுவிட்டு, பாடும் பணியே பணியாயருளிய, நாவாரத் தன்னடிகள் பாடுவிக்கும் நாயகனானின் நாரணன் மருகனின் – நல்லைவளர் வேலவனின் பதம் சூடி அருள் நாடிப் புகழ் பாடி அவ்வப்போது முருகன் அருள் முகிழ்ந்திடவே யான் பாடிய பாடல்களைக், கீர்த்தனைகளைத்

தொகுத்து **"நல்லைக் கந்தன் பாமாலை"**யாகக் நல்லைக் கந்தனடியார்களின் கரங்களில் பணிவன்புடன் சமர்ப்பிக் கின்றேன்.

இப்பாடல்கள் அனைத்தும் நல்லூரானின் திருவிழாத் திருநாட்களில் **ஈழநாடு, உதயன், முரசொலி, யுகசக்தி,** ஆகிய செய்தி ஏடுகளில் பிரசுரமானவையாகும். முதலில் இப்பாடல்களைப் பிரசுரித்துதவிய அவ்வேடுகளின் ஆசிரியப் பெருமக்கள் என அன்புக்கும் நன்றிக்கும் உரியவர்கள். அடுத்து இப்பாமாலைக்குச் சிறப்புப்பாயிரம் வழங்கியுதவிய 'இயலிசை வாரிதி' **இணுவையூர் பிரம்மஸ்ரீ ந. வீரமணி ஐயர்** அவர்கட்கும்; முன்னுரை தந்துதவிய கவிஞர், எழுத்தாளர், அறிஞர் உயர்திரு. **க. சொக்கலிங்கம் (சொக்கன்)** அவர்கட்கும், இசையாசிரியை சங்கீதபூஷணம் **ராதா சபாபதி** அவர்கட்கும், இத்தொகுப்பின் அட்டைக்கான ஓவியத்தை வரைந்து அன்புடனளித்த நாடறிந்த நல்ல ஓவியர் **திரு. ஆ. இராசையா** அவர்கட்கும், இந்நூலை அச்சிட்டுத்தந்த **மணிஓசை** அச்சக உரிமையாளர் எழுத்தாளர் இனிய நண்பர் **யோசப் பாலா** அவர்கட்கும், அவருக்கு உறுதுணையாகவிருந்த அச்சக ஊழியர்களுக்கும் எனது நெஞ்சில் மலர்ந்த நன்றிப் பூக்களைச் சமர்ப்பிக்கின்றேன்.

செந்தமிழால் வைதாரையும் வாழ வைக்கும் வள்ளல் வடிவேலனின் புகழ்பாடும் **"நல்லைக் கந்தன் பாமாலை"** செந்தமிழ் வடிவான கந்தவேளின் அடியார்களுக்கும் தமிழிசை வல்லவர்களுக்கும், ஆர்வலர்களுக்கும் அன்பர்களுக்கும் சமர்ப்பணம்.

**"முருகு"**

**கொழும்புத்துறை**
**யாழ்ப்பாணம்.**
**94 – 04 – 18**

உ

சிவமயம்


| | | |
|---|---|---|
| மகுடம் | : | நல்லைக் கந்தன் பாமாலை<br>(51 கீர்த்தனைகளின் தொகுப்பு) |
| Title | : | NALLAI KANTHAN PAAMAALA)<br>(Collection of 51 devotional SongsI |
| நூலாசிரியர் | : | முருகு |
| Author | : | MURUGU |
| பிரசுரம் | : | பிரணாஸ் பிரசுராலயம்<br>45, சுவாமியார் வீதி,<br>கொழும்புத்துறை, யாழ்ப்பாணம். |
| | : | PIRANAAS PIRASURAALAYAM<br>45, Swamiyar Road.<br>Columbuththurai, Jaffna |
| முதற் பதிப்பு | : | ஏப்பிரல் 1994 |
| First Edition | : | April 1994 |
| அட்டை ஓவியம் | : | ஓவியர் திரு. ஆ. இராசையா |
| Cover disign | : | Artist Mr, A. Rasiah |
| அச்சுப் பதிவு | : | மணி ஓசை அச்சகம்,<br>12, சென் பற்றிக்ஸ் வீதி, யாழ்ப்பாணம். |
| Printed by | : | Mani Osai Press,<br>I2' Patricks Road, Jaffna |


| | | |
|---|---|---|
| பதிப்புரிமை | : | ஆசிரியருக்கே |
| Copy right | : | Reserved with Author |


விலை<br>Price } 35/-

# கந்தா! கடம்பா!!
# கதிர்வேல் முருகையா!!

இராகம்: பகுதாரி

தாளம்: ஆதி

பல்லவி

*உன்நாமம் சொல்லும் என் உள்ளம் உருகுதையா!*
*என்நாவில் எந்நாளும் செந்தேன் பெருகுதையா!!*

*—(உன்—)*

அனுபல்லவி

*கந்தா கடம்பா கதிர்வேல் முருகையா!*
*செந்தா மரைப்பாதா செவ்வேள் குமரையா!!!*

*—(உன் —)*

சரணம்

*நில்லா என்நினைவும் உனையே நினைக்குதையா!*
*பொல்லா என்நெஞ்சம் பூவாய் மலருதையா!!*
*கல்லாம் என்னுள்ளம் இனிதாய்க் கனியுதையா*
*செல்லா என்காலும் நல்லூர் நடக்குதையா!!:*

*—(உன் —)*

ஈழநாடு 01 - 08 - 87

# நாடி அருள்வாய் நல்லூர்க் குகனே!

ராகம்; தேஷ் தாளம்; ஆதி

பல்லவி

*பாடும் பணியை அருள்வாய் - உன்னைப்*
*பாடும் மனதை அருள்வாய் - முருகா*

*—(பாடும் —)*

அனுபல்லவி

*வாடும் எனக்கோர் வாழ்வைத் தருவாய்!*
*பீடும் பெருக்கிப் பெருவாழ் வருள்வாய்!!*

*— (பாடும் —)*

சரணம்

*சூழும் துயரில் மூழ்கும் எனையே*
*வாழும் தமிழில் நாளும் உனையே*
*பாடிப் புகழ்ந்துன் பாதம் பெறவே*
*நாடி அருள்வாய் நல்லூர்க் குகனே!*

*—(பாடும் —)*

ஈழநாடு 02 - 08 - 87

# வரல் வேண்டும் உமைபாலனே!

ராகம்: அமிர்தவர்ஷிணி தாளம்: ஆதி

பல்லவி

*வரல் வேண்டும் உமைபாலனே - அருள்*
*தரல் வேண்டும் கதிர்வேலனே - மயில்மேல்*
*— (வர —)*

அனுபல்லவி

*தேடாத இடமில்லை! நாடாத தலமில்லை!*
*தேடாத பொழுதில்லைத் தாளாது மனதின்னும்!!*
*— (வர —)*

சரணம்

*அசுரர் குலமறுத்த வீரத்தை வியந்தார்கள்!*
*அமரர் குலமகளை மணந்ததை மகிழ்ந்தார்கள்!!*
*எழிலார் குமரனென்று எல்லாரும் பணிவார்கள்!*
*அருள்சேர் தலைவனென்று அன்பர்கள்*
*புகழ்வார்கள்!!*

*— (வர —)*

ஈழநாடு 04 . 08 . 87

# குமரா! புகழ்பாட ஆசை கொண்டேன்!!

ராகம்: ஹம்சநாதம் தாளம்: ஆதி

பல்லவி

*புகழ்பாட ஆசை கொண்டேன் - உந்தன்*
*புகழ்பாட ஆசை கொண்டேன் - குமரா*

*— (புகழ் -)*

அனுபல்லவி

*அருண கிரிநாதர் அமுதான தமிழாலே*
*முருகா! உனைப்பாடி உருகிநின் றதுபோலே*

*— (புகழ் -)*

சரணம்

*உள்ளோரின் புகழ்பாடி நாவும் சலித்ததையா!*
*உள்ளோரின் நலம்பாடிப் பாவும் வலித்ததையா!*
*வல்லோரின் திறம்பாடித் தமிழும் களைத்ததையா!*
*நல்லூரா! உனைப்பாடு மென்வாழ்வே*
*இனிக்குதையா*

*— (புகழ் -)*

ஈழநாடு 06 . 08 . 87

# உன்னடிகள் தஞ்சம் என்றே நல்லை வந்தேன்!

ராகம்: முகாரி　　　　　　　　　　　　　　　　தாளம்: ஆதி

பல்லவி

*காலமும் வீணே போகுதையா - என்தன்*
*ஓலமும் வீணே தொடருதையா - கந்தா*

*— (கால —)*

அனுபல்லவி

*பற்றிலார் பற்றிடும் நற்றுணை நீயேயென்று*
*பற்றெலாம் விட்டுனைப் பற்றியும் பயனேயின்றி*

*— (கால —)*

சரணம்

*உன்பெயரைக் கேட்டு உள்ளம் உருகிநின்றேன்!*
*உன்புகழைக் கேட்டுக் கண்ணீர் பெருகிநின்றேன்!*
*உன்னழகைக் கண்டே நெஞ்சம் ஏங்கிநின்றேன்!*
*உன்னடிகள் தஞ்சம் என்றே நல்லைவந்தேன்!!*

*— (கால —)*

ஈழநாடு 10 . 08 . 87

# குமரன்! கும்பிடும்
# அன்பரின் குழந்தையவன்!

ராகம்: பகுதாரி

தாளம்; ஆதி

பல்லவி

*நல்லூர் என்றொரு பதியுண்டு - அங்கு*
*சென்றால் நலம்சேர் கதியுண்டு - மனமே*

*—(நல் —)*

அனுபல்லவி

*சுடர்வேல் வடிவில் கந்தன் அங்கே - சூழும்*
*இடர்கள் துடைத்து அருள் தருவான் - பாடும்*

*—(நல் —)*

சரணம்

*கும்பிடும் அன்பரின் குழந்தையவன் - தன்னை*
*நம்பிடும் அன்பரின் நண்பனவன் - உள்ளம்*
*வெம்பிடும் அடியவர் துணைவனவன் - என்றும்*
*கும்பிடும் தொண்டரின் தலைவனவன் - குமரன்!*

*—(நல் —)*

ஈழநாடு 12 . 08 . 87

# கணமேனும்
# வந்தால் என்ன? முருகா!

ராகம்: சாரங்கா தாளம்: ஆதி

பல்லவி

*கணமேனும் மறவாதுன் கழல்கள்*
*நினைக்குமென் முன்*
*கணமேனும் வந்தால் என்ன? — முருகா!*
*— (கண —)*

அனுபல்லவி

*கந்தா கடம்பா கதிர்வேல் குமரையா!*
*வந்தாள் தந்தாள் உன்தாள் என்றுன்னைக்*
*—(கண —)*

சரணம்

*உன்புகழ் பாடுமென் கண்ணீர்*
*பெருகுதையா!*
*உன்னருள் கேட்டுஎன் உள்ளம்*
*மயங்குதையா!!*
*உன்திறம் கேட்குமென் நெஞ்சம்*
*களிக்குதையா!*
*உன்னெழில் காணஎன் உள்ளம்*
*தவிக்குதையா!!*
*—(கண —)*

உதயன் 17 . 08 . 87

# தினமுனைப் புகழ்வேன்!
# அருள் உமை பாலா!!

**ராகம்: சிம்மேந்திரமத்யமம்** **தாளம்: ஆதி**

**பல்லவி**

*தினமுனைப் பணிவேன் கதிர்வடி வேலா!*
*தினமுனைப் புகழ்வேன் அருள்உமை பாலா!!*

— (தின —)

**அனுபல்லவி**

*கனியினைக் கொடுத்துச் செருக்கினைத் தணித்தாய்!*
*கனியினை இழந்துன் உறவினை வெறுத்தாய்!*

— (தின —)

**சரணம்**

*உன்புகழை யல்லால் நானேதும் சொல்லேன்!*
*உன்பணியை யல்லால் நானேதும் செய்யேன்*
*நல்லைநக ரல்லால் நானெங்கும் செல்லேன்!*
*நல்லருளை யல்லால் நானேதும் கொள்ளேன்!!*

— (தின —)

ஈழநாடு **22 . 08 . 87**

# மாமயிலில் வருவாய் நல்லூர்க் குகனேசா!

ராகம்:- வசந்தா　　　　　　　　தாளம்:- ஆதி

பல்லவி

*நாயகன் யார்தான் உள்ளார்? — எனக்கு*
*நாயகன் நீதான் ஐயா — முருகையா!*

—(நாய—)

அநுபல்லவி

*மாயவனின் மருகா முருகா குமரேசா!*
*மாமயிலில் வருவாய் நல்லூர்க் குகனேசா!!*

—(நாய—)

சரணம்

*நாயினும் கீழாமென்னைத் தாயெனப்*
*பரிந்தெடுத்துச்*
*சேயினும் மேலாயென்னைப் பேரன்பு*
*செய்தாயையா!*
*தீயினும் தீயேனையா! தீண்டுதல் தகுமோ ஐயா?*
*ஆயினும் அழகாஎன்னை அன்புடன்*
*அணைக்கின்றாயே!!*

—(நாய—)

வாரமுரசொலி 23 . 08 . 87

# முத்துக் குமரா உள்ளம் வாடுறேன்!

ராகம்; கானடா தாளம்; ஆதி

பல்லவி

முருகா உன்னைத் தேடுகிறேன் - முத்துக்
குமரா உள்ளம் வாடுகிறேன்! - நல்லை

—(முரு--)

அனுபல்லவி

கானக் குறமகளாம் வள்ளி குஞ்சரியோடு
கான மயில்மீது கந்தா உன் எழில்காண

—(முரு—)

சரணம்

போகாத தலமில்லைக் குகனேஉன் எழில்காணேன்!
கேளாத பேரில்லை முருகா உன் குரல்கேளேன்!!
நோகாத கணமில்லை அழகாஉன் அருள்காணேன்!
ஆகாத நிலைகண்டு ஐயா நான் நல்லைவந்தேன்!!

—(முரு—)

ஈழநாடு 23 : 08 : 87

# இணையில்லாத் துணைவன் நீ என்பதையும் அறிந்தேன்!

ராகம்: தேஷ் தாளம்: ஆதி

பல்லவி

*பற்றிட எதுமின்றிப் பற்றினேன் உன்தன்பாதம்!*
*கொற்றவா அருள்வாய் ஐயா - முருகையா!!*
*—(பற்றி—)*

அனுபல்லவி

*துணையெலாம் துணையென நம்பியே*
*-அலைந்தேன்!*
*இணையிலாத் துணைவன்நீ என்பதையும்*
*-அறிந்தேன்!!*
*—(பற்றி—)*

சரணம்

*பெற்றதோர் பேர்புகழ் செல்வமும் துணையா*
*யில்லை!*
*உற்றவர் பெற்றவர் சுற்றமும் நிலையாயில்லை!!*
*கற்றபேரறிஞரின் சுற்றமும் நிலையாயில்லை!*
*நற்றவா! நல்லைவாழ் வேலவா!! இனிமேலிங்கு*
*—(பற்றி—)*

ஈழநாடு 24 . 08 . 87

# பேரான நல்லைவாழ் வேலாயுதா குமாரா!

ராகம்: பாகேஸ்வரி தாளம்: ஆதி

பல்லவி

*பேரெழில் காணேனோ பேராவல் தீராதோ?*
*பேரான நல்லைவாழ் வேலாயுதா குமாரா!*
*—(பேரெ )*

அனுபல்லவி

*நம்தமிழ் ஔவைக்கு நாவற் பழம் தந்து*
*நாவடைக்கச் செய்தாய் நற்றமிழின் தலைவா!*
*—(பேரெ —)*

சரணம்

*ஆடிடும் மயில் மீது முருகா நீ வரும் வேளை*
*கூடிடும் குஞ்சரியாள் இடம்நாடி வரல்வேண்டும்!*
*வாடிடும் குறவள்ளி வலம்நாடி வரல்வேண்டும்!!*
*தேடிடும் அன்பர்கள் புகழ்பாடித் தொழுமந்தப்...!*
— 0 — *—(பேரெ )*

*தங்க வடிவேலா உன்தன் தலைமையிலே*
*தங்கத் தமிழ்ப்புலவோர் சங்கம் அமைத்ததிலே*
*பொங்கும் தமிழமுதை எங்கள் உயிர்த்தமிழைக்*
*கங்குல் பகலென்றும் காத்து வளர்த்த அந்தப்...!*
*—(பேரெ —)*

யுகசக்தி 06 . 09 . 87

# கால கண்டன் கண்ணில் கனிந்த குமரேசா!

ராகம்: பரமேஸ்வரி தாளம்: ஆதி

பல்லவி

*ஆற்றுவ தாரையா போக்கிட மேதையா?*
*ஏற்றவன் நீயே ஐயா - முருகையா!*

*—(ஆற்—)*

அநுபல்லவி

*காலகண்டன் கண்ணில் கனிந்த குமரேசா!*
*கார்த்திகைக் கன்னியரைக் கவர்ந்த குகனேசா!!*

*— (ஆற் —)*

சரணம்

*மானிடனாய்ப் பிறந்து மானிடனாய் வளர்ந்தேன்!*
*வீணிடமே அலைந்து நானிடர்கள் அடைந்தேன்!!*
*நேரிடர் போதாதோ? வாடிடல் காணாயோ?*
*சேரிட முன்னையல்லால் வேறில்லை நல்லைக்*
*-கந்தா!!*

*—(ஆற்—)*

உதயன் 21 . 08 . 88

# மங்கையர் மடிநடந்த நல்லைநகர்க் குகனே!

ராகம்: ரஞ்சனி தாளம்: ஆதி

பல்லவி

வேலென்றும் வினையோட்டும் மயிலென்றும்
எனைக்காக்கும்!
வேறென்ன வேண்டும் எனக்கு - மனமே!

— (வேலெ - )

அனுபல்லவி

கங்கையிலே தவழ்ந்து பொய்கையிலே வளர்ந்து
மங்கையர் மடிநடந்த நல்லைநகர்க் குகனின்

—(வேலெ —)

சரணம்

வலையெனப் பிணைந்துவரும் பிணியையும்
போக்கிடுமே!
அலையெனக் கிளர்ந்துஎழும் இடரையும்
தீர்த்திடுமே!!
மலையென நிமிர்ந்துவரும் துயரையும்
சாய்த்திடுமே!
தொலைவென முனைந்துவரும் எதனையும்
ஓட்டிடுமே!!

— (வேலெ — )

உதயன் 30. 08. 88

# சேந்தனே நல்லைவளர் வேந்தனே!

ராகம்: ரஞ்சனி　　　　　　　　　　　　　　　　தாளம்: ஆதி

பல்லவி

நாதன்நீ என்குரு நாதன்நீ - சண்முக
நாதன்நீ பொன்மலர்ப் பாதன்நீ! - சற்குரு

— (நாதன் —)

அனுபல்லவி

சேந்தனே நல்லைவளர் வேந்தனே - குஞ்சரியாள்
காந்தனே வள்ளிமகிழ் ஏந்தலே - நெஞ்சிலுறை

— (நாதன் —)

சரணம்

அன்பருக்கு அன்பன்நீ அன்பில்வளர் இன்பம்நீ!
நண்பருக்கு நண்பன்நீ நம்புமன்பர்க் கன்பன்நீ!
சுற்றம்தரும் சுகமும்நீ சுற்றிவளர் உறவும்நீ!
கற்றறிவின் கனிவும்நீ நற்றவத்தின் பயனும்நீ!!

— (நாதன் —)

ஈழநாடு 05. 08. 89

# முன்னைத் தலைநகராம் நல்லை வளர்பவனே!

ராகம்: காபி

தாளம்: ஆதி

பல்லவி

சேவற் கொடியேந்தும் செல்வா! சிவபாலா!!
சேம மெல்லா மருளுவாய் - கூவும்

— (சேவ - )

அனுபல்லவி

முன்னைத் தலைநகராம் நல்லை வளர்பவனே!
அன்னை உமையவளின் அன்புத் திருமகனே!

— (சேவ —)

சரணம்

பாவிடையே ஓடும் நூலெனை அலைகின்றேன்!
கோலிடையே ஆடும் பாலெனச் சுழல்கின்றேன்!
காற்றிடையே சுழலும் துரும்பென உழல்கின்றேன்!
ஆற்றிடையே அலையும் புல்லெனத் துடிக்கின்றேன்!!

—(சேவ - )

ஈழநாடு 06. 08. 89

# சுடர்வேல் தாங்கிவரும் சுந்தரனே! குகனே!!

ராகம்:- தேஷ் தாளம்: ஆதி

பல்லவி

சுடர்வேல் தாங்கிவரும் சுந்தரனே - பொற்
சுடர்வேல் ஏந்திவரும் எம்பரனே! - குகனே!!

—(சுடர் —)

அனுபல்லவி

துயர்மேல் துயர்தந்த சூரனுக்கும் - நல்ல
உயர்வாம் நிலைதந்த உத்தமனே! - குமரா!!

—(சுடர் -)

சரணம்

வளரும் பவமெல்லாம் தொலைத்திடுவாய் - நிதம்
கிளரும் வினையெல்லாம் துடைத்திடுவாய் - தினம்
படரும் துயரெல்லாம் விலக்கிடுவாய் - நல்லை
தொடரும் எனையுன்னோ டணைத்திடுவாய்! - ஐயா!!

—(சுடர் —)

உதயன் 07. 08. 89

# கோல மயில்மீது வருவாய் கந்தா!

ராகம்: மோகனம் தாளம்: ஆதி

பல்லவி

*மயில்மீது வருவாய் கந்தா - கோல*
*மயில்மீது வருவாய் கந்தா - ஆடும்*

—(மயில்—)

அனுபல்லவி

*அருள்தேடி அகம்வாடி அலைகின்ற அடியேனை*
*அருள்தந்து சுகம்தந்து பதம்தந்து பரிந்தேற்க*

—(மயில் -)

சரணம்

*பெற்றவற்றால் உன்னை ஏத்திப் பணிகின்றேன்!*
*கற்றவற்றால் உன்னைப் போற்றி புகழ்கின்றேன்!*
*நற்றவனே! நல்லைக் கொற்றவனே! குகனே!!*
*சுற்றமெல்லாம் நீயே சற்குருவே சரணம்!!*

—(மயில் -)

ஈழநாடு 08. 08. 89

# பார்த்திடல் எந்நாளோ? மால்மருகா!

ராகம்: வசந்தா தாளம்: ஆதி

பல்லவி

*பார்த்திடல் எந்நாளோ வேல்முருகா? - என்னை*
*ஏற்றிடல் எந்நாளோ மால்மருகா! - குமரா!!*

*—(பார்—)*

அனுபல்லவி

*கார்த்திகைக் குமராவுன் கீர்த்திகள் பலகூறும்*
*கீர்த்தனை தினம்பாடிப் போற்றிடும் அடியேனை*

*—(பார்—)*

சரணம்

*நாற்றிசை புகழ்ந்தேத்தும் நாவலர் பணிசெய்து*
*போற்றிய நல்லூரில் வீற்றிருந் தருள்செய்யும்*
*சாற்றரும் அழகோனே! சண்முகப் பெருமானே!!*
*ஊற்றெழும் வினையாலே ஆற்றுகிலேன் ஐயா!!*

*—(பார்—)*

உதயன் 10-08-89

# பாவிநான் உனக்கிழைத்த தவறென்னவோ முருகா?

ராகம்: சகனா　　　　　　　　　　　　　　　　தாளம்: ஆதி

பல்லவி

கூவிநான் உனை அழைத்தும் வாராத தேன்குமரா?
பாவிநான் உனக்கிழைத்த தவறென் னவோ முருகா?

— (கூவி —)

அநுபல்லவி

கந்தா கடம்பேசா! கதிர்வேல் குகனேசா!!
செந்தா மரைப்பாதா! நல்லூர்ப் பதிவாசா!!

— (கூவி —)

சரணம்

உன்புகழ் தினம்பாடிப் பணிவதென் பிழையாமோ?
உன்திருப் பெயர்நூறு ஜெபிப்பதென் தப்பாமோ?
உன்னரும் எழில்காணத் துடிப்பதென் தவறாமோ?
உன்பதம் துணையென்று கொள்வதென் தவறாமோ?

— (கூவி —)

ஈழநாடு 10 - 08 - 89

# வரமென்று பெறுவேனோ?
# சொல்லு முருகா!

ராகம்: சிந்துபைரவி                                                  தாளம்: ஆதி

பல்லவி

*வரமொன்று தருவாயோ நல்லைக்குமரா - இந்த*
*வரமென்று பெறுவேனோ சொல்லுமுருகா - குமரா*

*— (வர —)*

அனுபல்லவி

*வேண்டும்உன் அடியவர்க்கு வேண்டும்வரம் - தந்து*
*ஆண்டிடும் அருட்கடலே ஆறுமுகா - அழகா*

*— (வர —)*

சரணம்

*பொன்பொருள் பெருகவரம் வேண்டுவனோ - நாடும்*
*பெயர்புகழ் உயர்கவென்று வேண்டுவனோ - ஆடும்*
*மயில்மிசை வருகவென்றே ஏங்குகின்றேன் - கூடும்*
*எழிலதைப் பருகவரம் வேண்டுகின்றேன்-முருகா!*

*— (வர —)*

ஈழநாடு 14 - 08 - 89

# பரமனுக் குரைத்தவனே சரணமையா! முருகா!!

ராகம்: ரஞ்சனி தாளம்: ஆதி

பல்லவி

சரவணத்தில் உதித்துப் பிரணவத்தின் பொருளைப்
பரமனுக் குரைத்தவனே சரணமையா — முருகா!!

— (சரவ —)

அனுபல்லவி

பழமைமிகு நகராம் நல்லையின் வேலவனே!
பசுபதி பாலகனே! கணபதிக் கிளையவனே!!

— (சரவ —)

சரணம்

அன்புளோர் நினைந்துருகும் அருள்வடிவே வேலா!
நம்பினோர் நயந்துருகும் அருந்துணையே வேலா!!
அண்டினோர் துயர்களையும் அருமருந்தே குமரா!
அண்டரும் துதிபுரியும் அருட்கடலே குகனே!!

— (சரவ —)

உதயன் 14 - 08 - 89

# காத்தருள் புரிவாய் கந்தா!

ராகம்: சாவேரி　　　　　　　　　　　　　　　தாளம்: ஆதி

பல்லவி

*கார்த்தி கேயனே கதிர்வடி வேலவனே!*
*காத்தருள் புரிவாய் கந்தா - நல்லைக்*

—(கார் —)

அனுபல்லவி

*ஆர்த்தெழும் துயராலே ஆற்றுகி லேனையா!*
*பார்த்திருத்தல் அழகோ? பார்வதியின் பாலா!!*

— (கார் —)

சரணம்

*வெம்பிடும் சிறியேனைத் தேற்றுவ தெந்நாளோ?*
*நம்பிடும் எளியேனை ஆற்றுவ தென்றாமோ?*
*கும்பிடும் அடியேனை ஏற்பது மெந்நாளோ?*
*தும்பியின் சோதரனே! அம்பிகை பாலகனே!!*

— (கார் - )

ஈழநாடு 15 - 08 - 89

# நல்லைநகர் வளரும் வள்ளல்வடி வேலோய்!

ராகம்: கரகரப்பிரியா தாளம்: ஆதி

பல்லவி

*கணம்கணம் நினைத்தாலும் காணேனே - உன்னைத்*
*தினம்தினம் அழைத்தாலும் காணேனே - குமரா!*

*—(கண —)*

அனுபல்லவி

*முல்லைநகை சிந்தும் வள்ளி குஞ்சரியோடு*
*நல்லைநகர் வளரும் வள்ளல்வடி வேலோய்!*

*—(கண —)*

சரணம்

*நினைந்து நினைந்துஉள்ளம் சலித்ததை*
*அறியாயோ?*
*சலித்துச் சலித்து முன்னை அழைப்பதைப்*
*புரியாயோ?*
*அழைத்து அழைத்தென்நாவும் களைத்ததை*
*உணராயோ?*
*களைத்துக் களைத்துமுள்ளம் பதைப்பதைக்*
*கருதாயோ?*

*—(கண —)*

ஈழநாடு 16 – 08 – 89

# துயர் பட்டலைந்தேன் என் நிலை பாராயோ முருகா!

ராகம்: கானடா

தாளம்: ஆதி

பல்லவி

கெட்டலைந்தேன் என்கதை கேளாயோ - துயர்
பட்டலைந்தேன் என்நிலை பாராயோ - முருகா
— (கெட் —)

அனுபல்லவி

சுட்டும்விழிச் சுடராள் குஞ்சரி குறமாதைத்
தொட்டணைக்கும் அழகா! நல்லைவளர் குமரா!!
— (கெட் —)

சரணம்

நில்லாதன தொட்டேன்! செல்லாதன விட்டேன்!
அல்லாதன கற்றேன்! சொல்லாதன சொன்னேன்!!
பொல்லாதன செய்தேன்!! வெல்லாதன
வென்றேன்!
செல்லாவிடம் சென்றேன்! நில்லாவிடம் நின்றேன்!!
—(கெட்—)

ஈழநாடு 18 - 08 - 69

# மனம் சலித்தேனே நல்லைக் குமரா!

ராகம்: முகாரி

தாளம்: ஆதி

பல்லவி

*மனம் களைத்தேனே நல்லைமுருகா - ஏழை*
*மனம் சலித்தேனே நல்லைக்குமரா - இந்த*

*— (மன —)*

அனுபல்லவி

*நினைப்பவர் நெஞ்சினில் நிலைப்பவன்நீ - வருந்தி*
*அழைப்பவர் அன்பினில் திளைப்பவன்நீ - குகனே*

*— (மன —)*

சரணம்

*அலைத்திடும் ஆசைகளால் அலைந்துலைந்தே*
*களைத்தேன்!*
*துளைத்திடும் வினைத்துயரால் துடிதுடித்தே*
*இளைத்தேன்!!*
*பிணைத்திடும் உறவுகளால் சுமைசுமந்தே*
*வலித்தேன்!*
*பிணித்திடும் அவனியில்நான் பிறந்திறந்தே*
*சலித்தேன்!!*

*— (மன —)*

ஈழநாடு 22 - 08 - 89

# தாமதம் ஏன்தான் இன்னும்? முருகையா!

ராகம்: பாகேஸ்வரி தாளம்: ஆதி

பல்லவி

*தாமரை மலர்ப்பாதம் தஞ்சமென்றே வந்தேன்!*
*தாமதம் ஏன்தான் இன்னும்? - முருகையா!*

*—(தாமரை—)*

அனுபல்லவி

*கன்னல் மொழி பேசும் வள்ளி குஞ்சரியோடு*
*முன்னைப் பழநகராம் நல்லை வளர்வேலா - உன்*

*—(தாமரை —)*

சரணம்

*அல்லும் பகலுமிங்கு தொல்லை வருத்துதையா!*
*கல்லும் கனியும்படி வினைகள் விரட்டுதையா!*
*வெல்ல மெனுமென்தன் வாழ்வே கசக்குதையா!*
*வெல்லும் உன்னருள் நாடி நெஞ்சம் இறைஞ்சுதையா!!*

*—(தாமரை —)*

ஈழநாடு 23 - 08 - 89

# கந்தனை நல்லை கண்டேன்!

ராகம்: கரபி | தாளம்: ஆதி

பல்லவி

சிந்தையிலே புகுந்து விந்தைபல புரிந்த
கந்தனை நல்லை கண்டேன் - அன்றென்

—(சிந்—)

அனுபல்லவி

எந்தையினை மறந்து மந்தையென அலைந்த
நிந்தனைகள் புரிந்து விந்தையென மகிழ்ந்த

—(சிந்—)

சரணம்

நெஞ்சமதில் நிறைந்தென் வஞ்சமெலாம்
துடைத்தான்!
வஞ்சமதைத் துடைத்தோர் மஞ்சமதை
அமைத்தான்!!
மஞ்சமதை அமைத்தேன் அஞ்சலென
அணைத்தான்!
அஞ்சலென அணைத்துக் கஞ்சமலர் இணைத்தான்!

— (சிந்—)

ஈழநாடு 28 - 08 - 89

# இல்லையோ தாய் மனம்? சொல்லு குமரா!

ராகம்: ஸ்ரீரஞ்சனி | தாளம்: ஆதி

பல்லவி

இன்னுமேன் தாமதம் நல்லை முருகா - உனக்கு
இல்லையோ தாய்மனம் சொல்லுகுமரா - அழகா!

— (இன் —)

அனுபல்லவி

அடியவரின் துயரைக் கடிந்திடும் அருள்வேலா!
கொடியவரின் குடியைக் கடிந்தசெங் கதிர்வேலா!!

— (இன் —)

சரணம்

தாவிடும் மனத்துடனே தவிப்பது போதாதோ?
மோதிடும் மனத்துடனே மலைப்பது மாறாதோ?
ஆடிடும் மனமென்னை அலைப்பதைக் காணாயோ?
ஓடிடும் மனமென்னை வதைப்பதைத் தீராயோ?

— (இன் —)

உதயன் 29 – 08 – 89

# விழியெல்லாம் நீராக நானிருந்தேன் குமரா!

ராகம்: ஹம்சானந்தி தாளம்: ஆதி

பல்லவி

வருவாய் என்றுன்னைக் காத்திருந்தேன் - அருள்
தருவாய் என்றின்றும் பார்த்திருந்தேன் - முருகா

—(வரு -)

அனுபல்லவி

வழியெல்லாம் விழியாக நானிருந்தேன் - கேடும்
விழியெல்லாம் நீராக நானிருந்தேன் - குமரா

— (வரு -)

சரணம்

மறவேன் என்றெனக்கேன் வாக்களித்தாய் - சுகம்
தருவேன் என்றென்னையேன் ஊக்குவித்தாய் -வேறு
உறவேன் என்றன்றேன் தேற்றுவித்தாய் - நல்லை
வருவேன் என்றென்னையேன் ஏய்த்துவிட்டாய்
-குகனே

—(வரு—)

ஈழநாடு 29 - 08 - 89

# இந்நிலை ஏனையா?
# உன்பதில் கூறையா!

ராகம்: கன்னட                                                  தாளம்; ஆதி

பல்லவி

*என்நிலை பாரையா நல்லையின் முருகையா!*
*இந்நிலை ஏனையா? உன்பதில் கூறையா!!*

*— (என் —)*

அனுபல்லவி

*கண்களில் நீயையா கருத்திலும் நீயையா!*
*என்னுயிர் நீயையா இன்னுமேன் துயரையா?*

*— (என் —)*

சரணம்

*நம்பினோர் துணையென்றார் நம்பியுனைப்*
*பணிந்தேன்!*
*நம்பியுனைப் பணிந்தும் வெந்துயரில் நலிந்தேன்!!*
*அஞ்சினோர்க் கரணென்றார் தஞ்சமென்றுனை*
*யடைந்தேன்!*
*தஞ்சமென்றுனை யடைந்தும் சஞ்சலமே*
*மிகுந்தேன்!!*

*— (என் —)*

ஈழநாடு 30 – 08 – 89

# எல்லையில்லாக் கருணை வள்ளல் வடிவேலன்!

**ராகம்: சண்முகப்பிரியா** **தாளம்: ஆதி**

பல்லவி

நல்லையிலே நடந்தால் தொல்லையெலாம்
தொலையும்!
நல்லையைத் தினம் நாடுவாய் - மனமே
— (நல்லை —)

அனுபல்லவி

எல்லையில்லாக் கருணை வள்ளல்வடி வேலன்!
வள்ளி குஞ்சரியோடு உள்ளம்மகிழ்ந் துறையும்
— (நல்லை —)

சரணம்

மஞ்ஞைநட மாடும் கொத்துமலர்ச் சோலை - உயர்
மஞ்சுதொடும் கோயில் விஞ்சுமெழிற் கோலம் -பதம்
தஞ்சமென்றே கூடும் அன்பர்களின் ஓலம் - என்றும்
அஞ்சலென்றே கூறும் கோயில்மணி ஓசை - வளர்
— (நல்லை —)

உதயன் 01 - 08 - 90

# உனைப்பாடும் ஞானமின்றி வாடுகின்றேன்! முருகா!!

ராகம்: கௌரிமனோகரி தாளம்: ஆதி

பல்லவி

*உனைப்பாடும் ஆசையினால் பாடுகின்றேன் - நான்*
*உனைப்பாடும் ஞானமின்றி வாடுகின்றேன் -முருகா!*

*— (உனைப் — )*

அனுபல்லவி

*நெஞ்சினில் ஆசையை ஏன்வளர்த்தாய் - என்னை*
*விஞ்சிடும் துயர்களை ஏனளித்தாய் - குமரா*

*— (உனைப் — )*

சரணம்

*செந்தமிழ் அறிவைநான் அறியவைப்பாய் - போற்றும்*
*செந்தமிழ் இசையினைத் தெளியவைப்பாய் - நாளும்*
*தேன்தமிழ்ப் பாமலர்கள் மலரச்செய்வாய் - என்றும்*
*தேன்தமிழ்ப் பாமலர்கள் வளரச்செய்வாய் - முருகா!*

*— (உனைப் — )*

உதயன் 90 - 08 - 02

# நல்லைக்கு வந்தேன் ஐயா! முருகையா!!

ராகம்: பாகேஸ்வரி தாளம்: ஆதி

பல்லவி

*நல்வழியை மறந்து அல்லலுற்றுக் களைத்து*
*நல்லைக்கு வந்தேன் ஐயா - முருகையா*

*— (நல்வ —)*

அனுபல்லவி

*நல்வழித் துணையென்று நம்பிய துணையின்று*
*முள்வழிக் கிணையென்று கண்டுளம் தெளிந்தின்று*

*— (நல்வ —)*

சரணம்

*நல்வழியில் நடக்க என்துணையாய் வருவாய்!*
*உன்புகழை இசைக்க நன்மொழியைத் தருவாய்!!*
*உன்னெழிலில் திளைக்க உன்னருளைப்*
*பொழிவாய்!!*
*உன்நிழலில் இருக்கப் பொன்னடிகள் அருள்வாய்!!*

*— (நல்வ —)*

ஈழநாடு 90 - 08 - 04

# முருகையா! கதியினி நீயையா!!

இராகம்: ஹிந்தோளம் தாளம்! ஆதி

பல்லவி

கதிர்வடி வேலையா கதியெனக் கேதையா -
நல்லைப்
பதிவளர் முருகையா கதியினி நீயையா!

— (கதிர் —)

அநுபல்லவி

சற்குரு உனையென்றே சங்கரன் உவந்தேற்கச்
சொற்பொரு ளதைச்சொன்ன நற்குரு குமரையா!

— (கதிர் —)

சரணம்

நினைப்பதுன் உருவெங்கும்! நிலைப்பதுன்
திருவையா!!
முனைப்பதுன் அருளென்றும்! திளைப்பதுன்
அழகையா!!
இணைப்பதுன் அன்பென்றும்! இனிப்பதுன்
புகழையா!!
அணைப்பதுன் செயலெங்கும்! அனைத்துமுன்
அருளையா!!

— (கதிர் — )

உதயன் 90 - 08 - 12

# என்குரு நல்லைக் கந்தா!

இராகம்: பாகேஸ்வரி　　　　　தாளம்: ஆதி

பல்லவி

*இன்றொரு பணிதந்து நின்றெனக் கருள்செய்தாய்!*
*என்குரு நல்லைக் கந்தா - கடம்பா!*

*— (இன் —)*

அநுபல்லவி

*செந்தமிழ்ச் சொல்லாய்ந்து செந்தமிழிசை சேர்த்து*
*செந்தமிழ்த் தலைவாஉன் அந்தமில் புகழ்போற்ற*

*— (இன் —)*

சரணம்

*இராஜவிழி விழிக்கக் குருடனெனைப் பணித்தாய்!*
*காதவழி நடக்க முடவனெனைப் பணித்தாய்!!*
*பேரவையில் பாட ஊமையெனைப் பணித்தாய்!*
*பேரருட் துணைதந்துன் பெரும்பணியை முடித்தாய்!!*

*(இன் —)*

உதயன் 15 - 08 - 90

# நிதம் அழுதாலும் கேளாயோ! செல்வக்குமரா!!

இராகம் : பேகட      தாளம்: ஆதி

பல்லவி

தொழுதாலும் வாராயோ நல்லைக்குமரா - நிதம்
அழுதாலும் கேளாயோ செல்வக்குமரா - பதம்
— (தொழு —)

அனுபல்லவி

உன்திருப் பெயர்கூறி உன்னருட் புகழ்பாடி
உன்னெழிற் திறம்பேசி உன்திருப் பதிநாடி
— (தொழு —)

சரணம்

மெய்யெல்லாம் பொய்யாகக் கையெல்லாம்
மலராக்கி
விழியெல்லாம் நீராக மொழியெல்லாம்
உனக்காக்கி
உயிரெல்லாம் உனதாக்கி உணர்வெல்லாம்
உனைத்தேக்கி
பணியெல்லாம் உனக்காகிச் செல்வாஉன்
அருள்நோக்கி
— (தொழு —)

உதயன் 90 - 08 - 18

# மனம்கனிந் தருள்வாய் உமைபாலகனே!

ராகம்: சகானா தாளம்: ஆதி

பல்லவி

*மலரடி பணிந்தோம் மயில்வா கனனே!*
*மனம்கனிந் தருள்வாய் உமைபா லகனே!!*

— (மலர —)

அனுபல்லவி

*கல்லையும் கரைத்திடும் எம்துயர் பாராயோ?*
*நல்லையிலே வளரும் வள்ளலே கேளாயோ?*

— (மலர —)

சரணம்

*வெற்றிவே லெம்நிலையை மாற்றுவ தெந்நாளோ?*
*வல்லவே லெம்துயர்கள் போக்குவ தெந்நாளோ?*
*கருணைவே லெம்நலங்கள் நாட்டிட லென்றாமோ?*
*கனகவே லெம்குலத்தைக் காத்திட லென்றாமோ?*

0 — (மலர —)

*வானவரின் தாழ்வைத் துடைத்ததும் நீயல்லவோ?*
*வானவரின் வாழ்வை அமைத்ததும் நீயல்லவோ?*
*ஈனமிகு வாழ்வைத் துடைத்தருள் பொழியாயோ?*
*மானமுடன் வாழ்வை எமக்கருள் புரியாயோ?*

— (மலர —)

ஈழநாடு 15 - 08 - 91

# துயர் வெல்லக் கற்றுவிட்டேன்! முருகா!!

ராகம்: பாகேஸ்வரி | தாளம்: ஆதி

பல்லவி

அஞ்சுதற் கேதுமில்லை அவனியிலே - உன்னைத்
தஞ்சமென் றடைந்தபின்னர் தரணியிலே - முருகா!

—(அஞ் –)

அனுபல்லவி

கொஞ்சிடும் குறமாதின் அருந்துணைவா - தேவ
குஞ்சரி உறவாடும் நல்லைக்குமரா - அழகா!

— (அஞ் —)

சரணம்

துரும்பினைத் துணையென்று பற்றிநின்றேன்-
அந்தத்
துணையினில் பயனின்றி வெட்கி நின்றேன் -
சின்னத்
துரும்பிலும் நிறைவோனைப் பற்றிவிட்டேன்-
உன்தன்
துணையினில் துயர்வெல்லக் கற்றுவிட்டேன் -
முருகா!

—(அஞ்—)

உதயன் 18 - 08 - 91

# போதுமையா போதும் சோதனைகள் குமரா!

ராகம்: சிந்துபைரவி                                    தாளம்: ஆதி

பல்லவி

*மாதுமையின் புதல்வா மாயவனின் மருகா!*
*போதுமையா போதும் சோதனைகள் குமரா!!*

*—(மாது—)*

அனுபல்லவி

*அடியவரின் அன்பை ஐயமுறல் தகுமோ?*
*அடியவரைத் துயரில் ஆழ்த்துவதும் அழகோ?*

*—(மாது—)*

சரணம்

உள்ளதெல்லாம் உனக்கே அன்புடனே தந்தேன்!
உள்ளமெல்லாம் நல்லைப் பதியெனவே
கொண்டேன்!!
உள்ளதெல்லாம் உந்தன் வடிவெனவே கண்டேன்!!
உள்ளதெல்லாம் தந்தும் உள்ளமெல்லாம்
நொந்தேன்!!

*—(மாது—)*

முரசொலி 19 - 08 - 91

# தவமென்ன செய்தேனோ நல்லை முருகா!

ராகம்: தேஷ் தாளம்: ஆதி

பல்லவி

*தவமென்ன செய்தேனோ நல்லைமுருகா - வெல்லும்*
*தமிழினில் உனைப்பாட நல்லைக்குமரா - கந்தா!*

— (தவ —)

அனுபல்லவி

*தவமேதும் புரியாத அறிவிலி நான் - வாழும்*
*தமிழேதும் படியாத அறிவிலிநான் - சூழும்*

— (தவ —)

சரணம்

*அறியாவென் அகம்நாடி நீயமர்ந்தாய் - என்றும்*
*அறியாநல் லறிவெல்லாம் நீயளித்தாய் - அந்த*
*அறிவாலுன் புகழ்பாட நீபணித்தாய் - ஏதும்*
*அறியாவென் புகழ்பாட்டில் நீநிறைந்தாய் - முருகா!*

— (தவ —)

முரசொலி 23 - 08 - 91

# நல்லை நகர் வளரும் வெற்றி வடிவேலா!

ராகம்: காபி　　　　　　　　　　　　　　தாளம்: ஆதி

பல்லவி

நெஞ்சமெல்லாம் உனக்கே செஞ்சுடர் வேலவனே!
அஞ்சலெ றருர்வாய் ஐயா - ழ ந ை கயா!

—(நெஞ் —)

அனுபல்லவி

பகல்லைகள் செழித்துப் பல்திசையும் மணக்கும்
நல்லைநகர் வளரும் வெற்றிவடி வேலா!

—(நெஞ்—)

சரணம்

இன்பமும் துன்பமும் எனக்கென்றும் மயிலோனே!
பொன்னுடன் பொருள் மற்றும் யாவும் நீ
வேலோனே!!
அன்னையும் தந்தையும் அனைத்தும் நீ குமரோனே!
என்னுயிர்க் காதாரம் என்றும் நீ முருகோனே!!

—(நெஞ்—)

உதயன் 09 - 09 - 91

# கனிமொழி குறவள்ளி மகிழ்வோனே! குகனே!

ராகம்: காபி    தாளம்: ஆதி

பல்லவி

நுதல்விழி வழியாக உதித்தவனே - எங்கள்
நுதல்விழிச் சிவனாரின் திருமகனே - குகனே!

— (நுதல் —)

அனுபல்லவி

தனிமொழி தமிழாளும் நல்லையிலே - பேசும்
கனிமொழி குறவள்ளி மகிழ்வோனே - முருகா!

— (நுதல் —)

சரணம்

தமிழரெம் துயரொன்றும் காணாயோ - வாடும்
தமிழினத் துயர்போக்க வாராயோ - ஈழத்
தமிழரெம் நலம்காக்க மாட்டாயோ - தேடும்
தமிழர்க்கு அருள்கூட்ட மாட்டாயோ - குமரா!

— (நுதல் —)

ஈழநாடு 09 - 09 - 91

# வேண்டுவ தருளாயோ சொல்லு முருகா! குமரா!!

ராகம்: கானடா　　　　　　　　　　　　　　　　தாளம்: ஆதி

பல்லவி

வேண்டுவ தறியாயோ நல்லை முருகா - இன்னும்
வேண்டுவ தருளாயோ சொல்லு குமரா - கந்தா
— (வேண் —)

அனுபல்லவி

வானவர் துயர்தீர்த்தாய் வேலின்துணையால் -
அந்த
வானவர்க் கரசிந்தாய் வேலின்முனையால் - குமரா!
— (வேண் )

சரணம்

துன்பங்கள் தொடர்வதுமேன் உன்தன் விருப்போ
- நாளும்
இன்னல்கள் படர்வதுமேன் உன்தன் பொறுப்போ
- சூழும்
பின்னங்கள் அடர்வதுமேன் உன்தன் கருத்தோ
- மேலும்
வன்மங்கள் தொடர்வதுமேன் உன்தன் விருப்போ
- முருகா!
— 0 — — (வேண் )

உன்மக்கள் துயர்கண்டும் இன்னும்சகிப்பேன் -தினம்
புன்மக்கள் செயல்கண்ட பின்னும் சகிப்பேன்-நம்பும்
உன்மக்கள் துயர்போக்க இன்னும்மறுப்பேன் -
தொழும்
நன்மக்கள் நலம்சேர்க்க இன்னும்வெறுப்பேன் -
கடம்பா!
— (வேண் —)

ஈழநாடு 08 - 08 - 92

# தந்தையின் குருவாக அவன் அமர்ந்தான்!

ராகம்: வாசஸ்பதி தாளம்: ஆதி

பல்லவி

முருகனில் உயர்வான மூர்த்தி உண்டோ - யார்க்கும்
முருகனுக் கிணையான கீர்த்தி உண்டோ - நல்ல
(முரு - )

அநுபல்லவி

தந்தையின் விழியினிலே அவன் உதித்தான் - அந்தத்
தந்தையின் குருவாக அவன் அமர்ந்தான் - இந்த
— (முரு —)

சரணம்

அடியவர் பயம்போக்க வேல் எடுத்தான் - மிகக்
கொடியவர் குலம்போக்கக் களம் புகுந்தான் - தமிழ்ச்
செல்வியின் உளம்வெல்லப் பழம் அளித்தான் - குறச்
செல்வியின் உளம்வென்று கரம் பிடித்தான் - இந்த
- 0 - (முரு - )

எண்ணில்லா ஆடல்கள் அவன் புரிவான் - அதில்
எண்ணில்லா அன்பர்க்கும் அருள் புரிவான் - இந்த
மண்ணிலே அடியாரின் வினை முடிப்பான் - ஒளிர்
தண்ணிலாப் பதமலரில் அவன் இணைப்பான் - இந்த
— (முரு - )

உதயன் 24 - 08 - 92

# அந்தமில்லாத் தமிழை அருள் செய்தவா! முருகா!!

ராகம்: வசந்தா

தாளம்: ஆதி

பல்லவி

உள்ளமெல்லாம் நிறைந்தாய் நல்லைமுருகா – எம்
கள்ளமெல்லாம் களைத்தாய் செல்வக்குமரா-அழகா!

—(உள்ள—)

அனுபல்லவி

செந்தமிழால் போற்ற அருள்செய்தவா - எமக்கு
அந்தமில்லாத் தமிழை அருள்செய்தவா - முருகா

—(உள்ள—)

சரணம்

துள்ளிவரும் பகையைத் தொடர்ந்தழிப்பாய் -
மோதித்
தள்ளிவரும் துயரை விரைந்தழிப்பாய் நீலப்
புள்ளிமயில் அமர்ந்துன் பதமளிப்பாய் - கோல
வள்ளியுடன் மகிழ்ந்துன் பதமளிப்பாய் - ஐயா!

—(உள்ள—)

ஈழநாடு 25 - 08 - 92

# கொடுவினைகள் மறையும்!

ராகம்: பைரவி

தாளம்: ஆதி

பல்லவி

கந்தனின் பதம்பணிந்தால் எவ்வினையும்
தொலையும்!
சிந்தையி லிதைக் கொள்ளுவாய் - நல்லைக்
— (கந்த — )

அனுபல்லவி

தேவர்குலச் சுடரும் வேடர்குலக் கொழுந்தும்
தேடியுள்ளம் மகிழும் தேவாதி தேவன் நல்லைக்
— (கந்த — )

சரணம்

சங்கடம் பலசெய்யும் பழவினைகள் தொலையும்!
சங்கிலித் தொடரான கொடுவினைகள் மறையும்!!
செங்கதிர் தனைக்கண்ட வெம்பனியா யனைத்துப்
பங்கமெல்லாம் மறையும் கல்யாணத் திருநாளில்
— (கந்த — )

உதயன் 01 - 11 - 92

# செஞ்சுடர் வேலேந்தி நல்லையில் வளர்வோனே!

ராகம்: சண்முகப்பிரியா

தாளம்: ஆதி

பல்லவி

செந்தமிழ்ப் பாவாலென் கந்தனின் புகழ்பாட
வந்திடும் நலம் யாவுமே - தோழி!

— (செந் —)

அனுபல்லவி

செஞ்சுடர் வேலேந்தி நல்லையில் வளர்வோனை
அஞ்சுக மொழிவள்ளி குஞ்சரி அணைவோனைச்

— (செந் —)

சரணம்

சங்கடநிலை போக்கி மங்களம் சேர்த்திடுவான்!
மங்கள நிலைகூட்டிப் பொங்கிருள் ஓட்டிடுவான்!!
பொங்கிருள் தனையோட்டித் தங்கருள் கூட்டிடு
வான்!
தங்கருள் தனைச்சேர்த்துப் பங்கயம்சேர்த்
திடுவான்!!

— (செந் —)

ஈழநாடு 26 - 07 - 93

# நாவிலும் உறைபவன் நீ நல்லை முருகா!

ராகம்: பாகேஸ்வரி | தாளம்: ஆதி

பல்லவி

யாவிலும் நிறைபவன் நீ நல்லை முருகா - என்தன்
நாவிலும் உறைபவன் நீ நல்லைக்குமரா - அழகா!

— (யாவி —)

அனுபல்லவி

ஏற்பவர் எதிர்ப்பவர் நெஞ்சமெல்லாம் - நீ
ஏற்றிடும் எழில்சிந்தும் கோவிலையா - முருகா!

— (யாவி )

சரணம்

தேனிலும் சுவையாக நிறைந்திருப்பாய் - கொடும்
தேளிலும் விடமாகச் செறிந்திருப்பாய் - புவி
யாவிலும் யாவுமாய்க் கலந்திருப்பாய் - என்தன்
பாவிலும் யாவுமாய் இணைந்திருப்பாய் - குமரா!

— (யாவி — )

உதயன்: 93 - 07 - 27

# நானின்னும் காணேன் உன்னை! முருகையா!!

ராகம்: பந்துவராளி தாளம்: ஆதி

பல்லவி

நாமங்கள் பலகூறி நாவார அழைத்தாலும்
நானின்னும் காணேன் உன்னை - முருகையா!

— (நாம —)

அநுபல்லவி

நானிலம் புரக்கின்ற நாரணன் மருகோனே!
நானிலம் துதிக்கின்ற நல்லையின் முருகோனே!!

— (நாம —)

சரணம்

தாபங்களைத் துடைத்துன் துணைதர வாராயோ?
சாபங்களைத் தொலைத்துன் நிழல்தர மாட்டாயோ?
பாபங்களைத் தொலைத்துன் அணைதர வாராயோ?
பாதங்களில் இணைத்துன் அருள்தர மாட்டாயோ?

— (நாம —)

ஈழநாடு: 93 - 08 - 03

# மால்மருகன் என்னைக் காக்குமரனே! குமரன்!!

ராகம்: வசந்தா

தாளம்: ஆதி

பல்லவி

மாயவனின் மருகன் நல்லைக்குகனே - அந்த
மால்மருகன் என்னைக் காக்குமரனே - குமரன்!
— (மாய—)

அநுபல்லவி

கங்கையிலே பொறியாய்த் தவழ்ந்தவனாம் - ஆறு
மங்கையரின் அணைப்பில் வளர்ந்தவனாம் - வேலன்
— (மாய —)

சரணம்

நீக்கமின்றி என்னுள் நிறைந்திருப்பான் - இருள்
போக்கிடவே என்னுள் ஒளிர்ந்திருப்பான் - நலம்
ஆக்கிடவே தன்னை இணைத்திருப்பான் - அருள்
தேக்கிடவே என்னை அணைத்திருப்பான் - முருகன்!
—(மாய—)

சமநாடு: 93 - 08 - 12

# நிந்தித்த சூரர்க்கும் அருள்செய்த கதிர்வேலா!

ராகம்: பெகாக் தாளம்: ஆதி

பல்லவி

பாடிட வேண்டு மையா - கந்தனே!
பாடிட வேண்டு மையா - சந்ததம்

—(பாடி—)

அநுபல்லவி

வந்தித்த தேவர்க்கும் அறியாத வடிவேலா!
நிந்தித்த சூரர்க்கும் அருள்செய்த கதிர்வேலா!!

—(பாடி—)

சரணம்

எந்தையர் அரசாண்ட நல்லூராம் பதிசேர்ந்து
சிந்தையில் சுரக்கின்ற செந்தமிழ்ச் சொல்சேர்த்து
அந்தமில் சுவையூட்டும் அமுதான இசைசேர்த்து
கந்தனே! உனதுள்ளம் கனியாதோ எனப்பார்த்து

—(பாடி )

# பாட்டுக்குக் கருப்பொருளும் குகனல்லவோ?

ராகம்: பியாகடை | தாளம்: ஆதி

பல்லவி

*முருகனின் புகழ்பாட்டில் மூழ்கிடவே - உள்ளம்*
*உருகுதே அனல்பட்ட மெழுகெனவே - தோழீ!*

*— (முரு—)*

அநுபல்லவி

*மாயவனின் மருகோன் முருகையனாம் - நல்லை*
*மாநகரில் வளர்வோன் குமரேசனாம் - அந்த*

*— (முரு —)*

சரணம்

*பாடென்று பணிப்பவனும் அவனல்லவோ? - பாடும்*
*பாட்டுக்குக் கருப்பொருளும் குகனல்லவோ - கூடும்*
*பாட்டினிற் சுவைப்பொருளும அவனல்லவோ*
*-என்தன்*
*பாட்டினிற் திளைப்பவனும் குகனல்லவோ - ஐயன்*

*(முரு )*

# உனையன்றி வேறொன்றும் யானுமறியேன் முருகா!

ராகம்: சகானா — தாளம்: ஆதி

பல்லவி

வேதனை தீராயாம் நல்லை முருகா - இன்னும்
ஏதென்னைப் பாராயாம் சொல்லு முருகா - குமரா!

—(வேத—)

அநுபல்லவி

நன்றென்றும் தீதென்றும் யாதுமறியேன் - உலகில்
உனையன்றி வேறொன்றும் யானுமறியேன் - ஐயா

—(வேத—)

சரணம்

புன்மையன் இவனென்று கழித்தனையோ - ஏதும்
இன்மையால் ஏனென்று விடுத்தனையோ - மிகச்
சின்னவன் என்றென்னை நினைத்தனையோ - இவன்
என்னவன் என்றெண்ணி விடுத்தனையோ - முருகா

- 0 -

—(வேத—)

நித்தமுனை நினைப்பதனால் வெறுத்தனையோ
-உன்னில்
சித்தத்தை இணைத்ததனால் ஒறுத்தனையோ
-பாடும்
குற்றத்தைக் கணித்தென்னைக் கறுத்தனையோ
-என்ன
குற்றத்தைத் திணித்தென்னை மறுத்தனையோ
-குமரா!

—(வேத—)

## "துயரோட்டி அருள்செய்வாய் வடிவேலவா"

ராகம்: காம்போதி | தாளம்: ஆதி

பல்லவி

*ரதம்தன்னில் வருமெங்கள் கதிர்வேலவா - எம்*
*துயரோட்டி அருள்செய்வாய் வடிவேலவா - தங்க*

*—(ரதம் –)*

அனுபல்லவி

*தமிழாண்ட நல்லூரில் வளர்கின்றவா - தமிழ்த்*
*தாயான ஔவைக்குப் பழந்தந்தவா - இன்று*

*—(ரதம் —)*

சரணம்

*நலமெல்லாம் இழந்தின்று உளம்வாடுறோம் - இந்த*
*உலகெங்கும் நிழல்தேடி நாமோடுறோம் - இன்று*
*வளமோங்கும் நிலமின்றி நாமேங்கிறோம் - எம்*
*வளமோங்கும் வாழ்வுக்காய் உனைவேண்டுறோம்*
*-ஐயா*

*—(ரதம் —)*

## "கண்டு உள்ளம் மயங்கிவிட்டேன் ஞானக்கந்தனே"

**ராகம்: ஆனந்த பைரவி** தாளம்: ஆதி

பல்லவி

கண்குளிரக் கண்டுகொண்டேன் நல்லைக்கந்தனே
- உன்னைக்
கண்டுஉள்ளம் மயங்கிவிட்டேன் ஞானக்கந்தனே
-இன்றென்

—(கண் —)

அநுபல்லவி

தேவர்குலப் பொன்மகளாள் அணையும்வள்ளலே
- காணக்
குறவர்குலப் பெண்மயிலாள் இணையும்வள்ளலே
- இன்று

—(கண் —)

சரணம்

மலையெனவே நெடிதுயர்ந்த தங்கரதத்திலே-சிற்பக்
கலைகளிலே மிகுந்துநிற்கும் அன்புரதத்திலே
- மனதில்
நிலைபெறவே விரைந்துவரும் அழகுரதத்திலே
- அன்பின்
அலைகளின்மேல் உருண்டுவரும் தங்கரதத்திலே
- என்தன்

—(கண் —)

## டேன்

ாம்: ஆதி

கந்தனே
ன்னைக்
ந்தனே
ின்றென்

—)

ாளலே
- கானக்
வள்ளலே
- இன்று

ா —)

ல-சிற்பக்
லே
- மனதில்
ிலே
அன்பின்
த்திலே
- என்தன்

ன —)

"தம்மையே புகழ்ந்திச்சை பேசினும் சார்பினுந் தொண்டர்த் தருகிலாப் பொய்ம்மையாளரைப் பாடாதே" எந்தை நல்லை முருகப் பெருமானையே பாடி முருகுடைத் தீந்தமிழுக்கு, அதன் பத்திப்பா நலத்துக்கு அணிசேர்க்கும் "முருகு" ஈழத்துப் பத்திப் பாவலர் வரிசையிலே தமக்கெனக் குறிப்பிடத்தக்கதோர் இடத்தைப் பெற்றுவிட்டார்" உண்மை, வெறும் புகழ்ச்சியில்லை !! "

"சொக்கன்"